**விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொ)அவர்களின்**

**செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர் : மரு.க.பிர்தௌஸ்பாத்திமா. எம்.டி. (சித்தா)**

ந.க. அ6/3583/2020 நாள் : 10.05.2024

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் - விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு - காரியாபட்டி வட்டம் - முடுக்கன்குளம் கிராமம் - கிராம உதவியாளர் - திரு.ஊ.சரவணமாயாண்டி - பணியின் போது - 30.10.2019-இல் காலமானது - அன்னார் மகன் செல்வன். ச.உதயபிரகாஷ் - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் செய்யப்பட்டது - 07.11.2022 மு.ப. பணியேற்பு செய்தது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 07.11.2022 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1) விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.நக.அ6/3583/2020, நாள். 30.09.2022.
2) விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறை ஆணைகள் எண். ந.க.அ/3583/2020, நாள். 27.10.2022
3) இவ்வலுவலகக் கடிதம் ந.க அ6-3583-2020 நாள் 28.02.2023
4) அரசுக்கடிதம் எண் 5532/G2/2023-1 மனிதவள மேலாண்மைத் (G) துறை நாள் 20.09.2023
5) அரசுக் கடித (1டி) எண் 64 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-9(2) பிரிவு நாள் - 18.01.2024
6) கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாய ஆணையர், சென்னை அவர்களின் கடித எண் ஆ.கு 3/4600/2024 நாள் 20.02.2024

((()))

**ஆணை :-**

விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், காரியாபட்டி வட்டம், முடுக்கன்குளம் கிராமத்தில், கிராம உதவியாளராகப் பணிபுரிந்து, பணியின்போது 30.10.2019- அன்று காலமான திரு.ஊ.சரவணமாயாண்டி என்பவரின் மகன் செல்வன்.ச.உதயபிரகாஷ் என்பவருக்கு பார்வை 1-இல் காணும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது. பார்வை 2-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்பட்டு, தனியர் 07.11.2022 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 07.11.2 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட அரசின் ஆணையை பெற்றுத் தரக் கேட்டு, சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு பார்வை (3) இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் வழி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக அரசால் தெளிவுரைகள் வழங்கப்பட்டு , அசல் முன்மொழிவுகள் சென்னை, வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பணிவரன்முறை செய்வது தொடர்பாக , பார்வை (6) இல் காணும் கடிதத்தில், பத்தி எண் 6(III)- இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

III. பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும்பணியினை ,ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் ,பார்வை (4) இல் காணும் அரசுமனித வள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி , வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்நேர்வில், பார்வை (4) - இல் காணும் கடிதத்தில் பத்தி எண்-3 இல் , பின்வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3)The Services of the Government servents who are appointed or yet to be appointed, on Compassionate Grounds, shall be regularized as per the Tamilnadu Civil Services (Appointment on Compassionate Grounds)Rule, 2023

மேற்காணும் தெளிவுரையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி பணிவரன்முறை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரசாணை .எண் (நிலை)33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு-க்யூ1)த் துறை, நாள் .08.03.2023 , தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 - இல் பணிவரன்முறை என்னும் தலைப்பில் பின்வருமாறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**16. Regularization of appointments.— Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one**

year from the date of his joining service, subject to eligibility.

ஆகவே பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் பணியினை , ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் , தமிழ்நாடு குடிமைப்பணிகள். (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 - இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி, நியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கருணை அடிப்படை பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்திருப்பதாலும், விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத காரணத்தினாலும் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியேற்பு செய்த நாளான 07.11.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(3/3)

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)
விருதுநகர்

பெறுநர் : தொடர்புடைய நபர்.

நகல்:-

1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு), விருதுநகர்.
2. அ6 இருப்புக்கோப்பிற்கு